# 15

# விவசாய பம்புசெட்டுகள் காப்பீட்டு பாலிசி

## 1. காப்புறுதியின் கீழ் வருபவைகள்

விவசாயத்திற்காக மட்டும் பயன்படும் சென்ட்ரி.்.ப்யூகள் பம்புசெட்டுகள் மற்றும் சப்மெர்சிபிள், டீசல் மின்சார பம்புசெட்டுகள். இதில் பம்பு, டிரைவிங் யூனிட் மற்றும் ஸ்டார்ட்டர்.

## 2. அடையாளக் குறி

உற்பத்தியாளர் பெயர், உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டு, வரிசை எண் (சீரியல் நம்பர்), குதிரை திறன்.

## 3. கீழே கொடுக்கப்பட்டுள்ள காரணங்களுக்கு காப்பீடு வழங்கப்படும்

a) இயந்திர / மின் முறிவினால் பழுதாகுதல்
b) தீ விபத்து மற்றும் மின்னல் தாக்குதல்
c) திருட்டு மற்றும் கொள்ளை போகுதல் (பம்பு ஒரு நிரந்த அமைவிடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட நேர்வில் பூட்டை உடைத்து திருடப்பட்டிருந்தால் மட்டுமே. சப்மெர்சிபிள் பம்புகளுக்கு பொருந்தாது)
d) கலவரம் / வேலை நிறுத்தங்கள், வன்முறை தாக்குதல், தீவிரவாதம்.
e) வெள்ளம் (சாதாரண பம்புகளுக்கு காப்பீட்டுத் தொகையில் 2 சதவிகிதம் கூடுதல் ப்ரீமியமாகவும் மற்றும் சப்மெர்சிபிள் பம்புகளுக்கு 1 சதவிகிதம் கூடுதல் ப்ரீமியமாகவும் செலுத்தப்படும் பட்சத்தில்)

## 4. விதிவிலக்குகள்

I. வழக்கமான தேய்மானம், வெப்பநிலை சூழ்நிலைகள் அல்லது மற்றவைகள் காரணமாக கெட்டுப்போதல்
II. காப்பீடு பெற்றவர் அல்லது அவரது பிரதிநிதியினால் வேண்டுமென்றே அசட்டையாய் பராமரிப்பின்றி வைத்தல்
III. காப்பீடு பெற்றவர் அல்லது அவரது பிரதிநிதிக்கு ஏற்கனவே பழுது இருப்பது தெரிந்து காப்பீட்டினை மேற்கொள்ளுதல்
IV. சட்டப்படியான அல்லது ஒப்பந்தத்தின் கீழ் உற்பத்தியாளரோ அல்லது பம்பு செட்டு வினியோகஸ்தரோ இழப்பு அல்லது பாதிப்பிற்கு பொறுப்பாளராக இருக்கும் போது.
V. கழற்றுதல், பழுது நீக்கல் மையத்திற்கு கொண்டு செல்லுதல் மற்றும் மீண்டும் கொண்டுவருதல் மற்றும் மீண்டும் நிறுவுதல் கட்டணங்கள்

## 5. காப்பீட்டுத் தொகை

பாலிசி காலத்தின்போது, 100 சதவிகித சந்தை மதிப்பு அல்லது பின்னிணைப்பு ‘c’ – ன் படி சப்மெர்சிபிள் பம்புகளுக்கு நடப்பு மாற்று மதிப்பு.

## 6. பிரிமியத் தொகை

கட்டண அட்டவணையின் படி

a) பின்னிணைப்பு ‘A’ – ன் படி பம்பு செட்டுகள் வகை மற்றும் குதிரை திறனின் அடிப்படையில் ப்ரீமியம் கட்டணம் நிர்ணயம் செய்யப்படும்.

b) சப்மெர்சிபிள் பம்புகளுக்கு பின்னிணைப்பு ‘C’ – ன் படி ப்ரீமியம் கட்டணம் நிர்ணயம் செய்யப்படும்.
c) சம்பெர்சிபிள் பம்புகள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டது என்றால் ப்ரீமியம் 50 சதவிகிதமாக கருதப்பட வேண்டும்.

**7. குறைந்தபட்ச ப்ரீமியம்**

ரூ.40/- (மின்சார பம்புசெட்களுக்கு)

ரூ.55/- (டீசல் பம்புசெட்களுக்கு)

பாலிசியின் கீழ் எத்தனை பம்புசெட்டுகள் இருப்பினும், ஒரு யூனிட் சம்பெர்சிபிள் பம்புசெட்டிற்கான குறைந்தபட்ச ப்ரீமியம் ரூ.250/-

**8. தள்ளுபடிகள்**

a) இழப்பீடு கோராததற்கான தள்ளுபடி: பம்புசெட்களின் சிறப்பான பராமரிப்பினை ஊக்குவிக்கும் வகையில் பின்வரும் விகிதங்களில் உரிமக்கோரிக்கை வைக்காததற்கான தள்ளுபடி வழங்கப்படும்.

பின்வரும் ஆண்டில் புதுப்பித்தலின் போது வழங்கப்படும் தள்ளுபடி

I. ஒரு ஆண்டில் இழப்பீடு கோரவில்லையெனில் - 10 சதவிகிதம்
II. இரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக இழப்பீடுகோரவில்லையெனில் - 15 சதவிகிதம்
III. மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக இழப்பீடு கோரவில்லையெனில் - 20 சதவிகிதம்

**b) நீண்ட காலகட்ட தள்ளுபடி**

I. 2 ஆண்டுகள் பாலிசி - 15 சதவிகிதம்
II. 3 முதல் 5 ஆண்டுகள் - 25 சதவிகிதம்
III. 6 முதல் 9 ஆண்டுகள் - 35 சதவிகிதம்

c) **குழுமத் தள்ளுபடி**

பம்புசெட்களின் எண்ணிக்கை

2500 முதல் 5000 வரை - 10 சதவிகிதம்
5001 முதல் 25000 வரை - 15 சதவிகிதம்
25001 முதல் 50000 வரை - 20 சதவிகிதம்
50000 – ற்கும் மேல் - 25 சதவிகிதம்

## 9. கழிக்கத்தக்க பிரான்சைஸ்

விவசாய பம்புசெட்களில் இயந்திர செயலிழப்பினால் வைக்கப்படும் உரிமக்கோரிக்கை என்னும் பட்சத்தில், காப்பீடு பெற்றவர் குறிப்பிடத்தக்க உரிமக்கோரிக்கை தொகையை அனுபவிக்க வேண்டும். சப்மெர்சிபிள் பம்புகளுக்கு 1 சதவிகிதத்திற்கு மேலோ அல்லது ரூ.250/- க்கு மேலோ எது அதிகமாக வருகிறதோ அதை கருத்தில் கொள்ள வேண்டும்.

## 10. காப்பீடு வழங்குவதற்கான முக்கிய அறிவுறுத்தல்கள்

I. மோசமான நிறுவனம் / தரம் கொண்ட தயாரிப்புகளுக்கு காப்பீடு வழங்குதல் தவிர்க்கப்பட வேண்டும்.
II. காப்பீட்டுத் தொகை நடப்பு மாற்று மதிப்பிற்கு குறைவானதாக இருக்கக்கூடாது மற்றும் தேய்மான மதிப்பாகவும் இருக்கக்கூடாது.
III. குதிரை திறனுக்கு ஏற்ப அதிகபட்ச ரீவைண்டிங் கட்டணங்கள் தொடர்பான மேல்குறிப்பு பாலிசியில் இணைக்கப்பட வேண்டும்.
IV. பம்பு தொடர்ச்சியாக சர்வீஸ் செய்யப்பட்டிருக்க வேண்டும் மற்றும் ஆண்டிற்கு ஒரு முறை ஓவராய்லிங் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
V. பம்ப் பயன்படுத்தப்படாமலோ அல்லது அவ்வப்பொழுது பயன்படுத்தப்பட்டிருந்தாலோ ப்ரீமியம் திரும்பத்தருதல் அனுமதிக்கப்படக்கூடாது.
VI. அனைத்து உரிமக் கோரிக்கைகளும் ஆண்டிற்கு 10 சதவிகிதம் தேய்மானத்திற்கு உட்பட்டதாகும் மற்றும் அதிகபட்ச தேய்மானம் பம்பு நிறுவப்பட்ட போது இருந்த மதிப்பில் 75 சதவிகிதத்திற்கு குறைவாக இருத்தல் கூடாது.
VII. ஒட்டுமொத்த இழப்பு உரிமக்கோரிக்கையில் நிறுவனத்தின் பொறுப்பு சப்மெர்சிபிள் பம்பு எனில், மீட்க முடியாத நேர்வில் இழப்பு மதிப்பில் 50 சதவிகிதம் கருத்தில் கொள்ளப்படும்.
VIII. சப்மெர்சிபிள் பம்புசெட்களுக்கு முன்-அனுமதி சோதனை பரிந்துரைக்கப்படும்.
IX. சப்மெர்சிபிள் பம்புகளின் ப்ரீமியம் மற்றும் உரிமக்கோரிக்கைகளுக்கான புள்ளிவிபரங்கள் மற்றும் கோரிக்கைகள் விவசாய பம்புசெட் காப்பீட்டிலிருந்து தனியாக வைக்கப்பட வேண்டும்.
X. 25 குதிரை திறனுக்கு மேற்பட்ட பம்பு செட்கள் பொறியியல் துறையின் கீழ் காப்பீடு செய்யப்பட வேண்டும்.

## 11. கோரிக்கை செய்முறை

I. இழப்பு குறித்து காப்பீட்டுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் உடனடியாக எழுத்து மூலம் தகவல் தெரிவிப்பார்.
II. தகவல் தெரிவித்தல், உரிமக்கோரிக்கைப் படிவம் மற்றும் செயலிழப்பு எனில் பழுது மதிப்பீடு மற்றும் கொள்ளை, தீவிரவாதம் மற்றும் வேலை நிறுத்தம் போன்றவைகள் எனில் காவல்துறை அறிக்கை ஆகியவைகளை பெற்றபின் நிறுவனம் உரிமக்கோரிக்கையை பதிவு செய்யும்.
III. கணக்கெடுப்பு மற்றும் தேவைப்படின் விசாரணை ஆகியவைகளை மேற்கொள்ள பொருத்தமானதொரு ஆய்வாளர் நிறுவனத்தால் அனுப்பப்படுவார்.
IV. பழுது நீக்குபவர் / ஆய்வாளரிடமிருந்து ரசீதுகள் மற்றும் அறிக்கை பெற்றபின், உரிமக்கோரிக்கை செயல்படுத்தப்படும் மற்றும் சால்வேஜ், கழிக்கத்தக்க பிரான்சைஸ் ஆகியவைகளை கணக்கிட்டு எங்கள் பொறுப்பு மதிப்பிடப்படும்.

## 12. கடப்பாடு அளவு

கடப்பாடு அளவு பழுது / பாதிப்பினை சரிசெய்தல் அளவாகும். பின்னிணைப்பு ‘B’ – ன் படி ரீவைண்டிங் கட்டணங்களுக்கு அதிகபட்ச கடப்பாடு கருதப்படும்.

13. **படிவங்கள் / ஆவணங்கள்**

A) முன்மொழிவு B) பாலிசி C) உரிமக்கோரிக்கை படிவம் D) மதிப்பீடுகள் E) பில்கள் F) ரசீதுகள்

## விவசாய சென்ட்ரி∴ப்யூகல் பம்ப்செட் பிரீமியம்

**“பின்னிணைப்பு” 'A'**

**அட்டவணை 1- மின்சார மோட்டார்**

| குதிரைத் திறன் | பிரீமியம் ரூ. | கழிக்கத்தக்க ∴பிரான்சைஸ் ரூ. |
|---|---|---|
| 3.0 | 40 | 75 |
| 5.0 | 45 | 75 |
| 5.0 | 65 | 85 |
| 10.0 | 70 | 90 |
| 15.0 | 95 | 115 |
| 17.0 | 95 | 115 |
| 20.0 | 110 | 140 |
| 25.0 | 130 | 140 |

**அட்டவணை II – டீசல் / எண்ணெய் செட்கள்**

| குதிரை திறன் | ப்ரீமியம் ரூ. | கழிக்கத்தக்க ∴பிரான்சைஸ் ரூ. |
|---|---|---|
| 5.0 | 55 | 90 |
| 7.5 | 60 | 105 |
| 10.0 | 80 | 115 |
| 15.0 | 100 | 140 |
| 17.5 | 110 | 160 |
| 20.0 | 125 | 175 |
| 25.0 | 140 | 200 |

## பின்னிணைப்பு ‘B’

## ரீவைண்டிங் கட்டணங்கள்

| குதிரை திறன் | அதிகபட்ச கடப்பாடு ரூ. |
|---|---|
| 3.0 | 600 |
| 5.0 | 800 |
| 7.5 | 1000 |
| 10.0 | 1300 |
| 15.0 | 1900 |
| 17.5 | 2000 |
| 20.0 | 2100 |
| 25.0 | 2400 |

## <u>பின்னிணைப்பு ‘C’</u>

## சப்மெர்சிபிள் பம்புசெட்

| குதிரை திறன் | காப்பீட்டுத் தொகை | பிரீமியம. | ரீவைண்டிங் கட்டணங்கள் (ரு) | ஒட்டுமொத்த இழப்பிற்கான கடப்பாடு (ரூ.) |
|---|---|---|---|---|
| 3&5 | 15,000 | 250 | 1,500 | 7,500 |
| 7.5 | 18,000 | 250 | 2,000 | 9,000 |
| 10 | 22,000 | 275 | 2,500 | 11,000 |
| 12.5 | 25,000 | 315 | 3,000 | 12,500 |
| 15 | 28,000 | 350 | 4,000 | 14,000 |
| 20 | 30,000 | 375 | 4,500 | 15,000 |
| 25 | 45,000 | 565 | 5,000 | 22,500 |

மேற்கூறப்பட்ட பிரீமியம் கட்டணங்களில் வெள்ள இடர்பாடு உட்படவில்லை